**கும்பகோணம்**

**அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்**

**இளங்கலை வணிக நிர்வாகவியல் துறை**

**சார்பில் ஒரு நாள் தேசிய அளவிலான மேலாண்மை சந்திப்பு**

கும்பகோணத்தை அடுத்த கோவிலாச்சேரியில் அமைந்துள்ள அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இளங்கலை வணிக நிர்வாகவியல் துறை சார்பில் **"ஒரு நாள் தேசிய அளவிலான மேலாண்மை சந்திப்பு" Spartanz-19** என்ற தலைப்பில் நடைபெற்றது. இதற்கு அன்னை கல்விக் குழும செயலாளர் **திரு.மு.இ.ஹீமாயுன் கபீர்** அவர்கள் தலைமையேற்று நடத்தினார். அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி **முதல்வர் முனைவர் எஸ்.பி.மாணிக்க வாசுகி** அவர்கள் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக திரைப்பட இயக்குனரும் நடிகருமான திரு. **சமுத்திரக்கனி** மற்றும் கேரளா, திருவனந்தபுரம் **டாக்டர்.சோமர்வேல் மெமோரியல் சி.எஸ்.ஐ.மருத்துவக் கல்லூரி** மருத்துவமனை நிர்வாகவியல் கல்லூரி முதல்வர் **பேரா.தி.ஜெயராஜசேகர்** ஆகியோர் கலந்துக்கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தாகள். இதில் 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு மேலாண்மை போட்டிகளில் கலந்து கொண்டனர். இதில் நாகப்பட்டினம் **ஈ.ஜி.எஸ்.பிள்ளை கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் முதல் பரிசை வென்று** இந்த ஆண்டுக்கான சுழற் கோப்பையையும் **ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசையும்** வென்றனர். முன்னதாக வணிக நிர்வாகவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவி **பிரியா** வரவேற்புரையாற்றினார். இறுதியாக வணிக நிர்வாகவியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவி **ரேஷ்மா** நன்றியுரையாற்றினார். இதில் அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி துணை முதல்வர்கள் **பேராசிரியர் எஸ்.இளஞ்செழியன்**, **பேராசிரியர் கே.ராஜா**, இளங்கலை வணிக நிர்வாகவியல் துறைத் தலைவர் **முனைவர் ரா.செல்வம்**, இளங்கலை வணிக நிர்வாகவியல் துறை பேராசிரியர்கள் **முனைவர் வ.மஞ்சுளா, இ.வின்சென்ட்**, **வே.துர்காதேவி, ரா.இனிய இளைய வென்னிலா** ஆகியோர் கலந்தக் கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை இளங்கலை வணிக நிர்வாகவியல் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் செய்திருந்தனர்.

